**செய்தி வெளியீடு எண் : 076** **நாள் : 12.01.2023**

**செய்தி வெளியீடு**

திி இந்து (The Hindu) ஆங்கில நாளிதழில் மூத்த புகைப்படக் கலைஞராக பணியாற்றி வந்த திரு. கே.வி.சீனிவாசன் அவர்கள் கடந்த 02.01.2023 அன்று பணியிலிருந்த போது, மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் மறைந்த திரு. கே.வி.சீனிவாசன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், ஊடகத் துறை நண்பர்களுக்கும் தனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்ததோடு தமிழ்நாடு அரசின் பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டத்தின் கீழ் உயிரிழந்த திரு.கே.வி.சீனிவாசன் அவர்களின் குடும்பத்தாருக்கு ரூ.5 லட்சம் வழங்கிடவும் உத்தரவிட்டிருந்தார்கள்.

இதன் அடிப்படையில், இன்று(12.01.2023), சென்னை, தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள், கடந்த 02.01.2023 அன்று பணியிலிருந்த போது மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்த தி இந்து (The Hindu) ஆங்கில நாளிதழின் மூத்த புகைப்படக் கலைஞர் திரு. கே.வி.சீனிவாசன் அவர்களின் குடும்பத்தாருக்கு பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டத்தின் கீழ் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.5 லட்சத்திற்கான காசோலையை வழங்கினார்.

இந்நிகழ்வின் போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் ஆர்.செல்வராஜ், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப. மற்றும் துறை உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in